**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 161/2022**
**Prosecution Witness - PW3**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ரவீந்தரன் |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.01.2026.

Accused is present.

முதல் விசாரணை–

நான் மணவாளக்குறிச்சி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 09.03.2020 அன்று பகல் 12.00 மணியளவில் நான் SSI சுரேஷ் மற்றும் SSI பால் ராஜ் என்பவரும், உதவி ஆய்வாளர் திரு. பாஸ்கரன் அவர்களுடன் மதுவிலக்கு ரோந்து அலுவலாக படர்நிலம், வயக்கரை என்ற இடத்தில் ரோந்து செய்து வரும்போது பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த ஆஜர் எதிரி மணி என்ற ஒற்றைக்கண் மணி ஒரு மஞ்சள் நிறப்பையில் தனக்கு முன்னால் இருந்தவரிடம் ஒரு பொருளை கொடுத்து பணம் வாங்கி கொண்டிருந்தார். எங்களை கண்டவுடன் பையை கீழே போட்டுவிட்டு ஓட முயற்சித்தவரை மடக்கி பிடித்து விசாரித்த போது மஞ்சள் நிறப்பையில் அரசு மதுபானக்கடையில் இருக்க கூடிய சுமார் 180ml பிடிக்க கூடிய 36 மது பாட்டில்கள் இருந்தது. எதிரியை விசாரித்த போது அதிக இலாபத்திற்காக அடையளம் தெரியாத நபரிடம் இருந்து வாங்கி விற்பனை செய்வதாகவும், விற்பனை செய்த பணம் கையில் ரூ.6000/– இருப்பதாகவும், தெரிவித்தார். பின்னர் 12.15 மணிக்கு அந்த மது பாட்டில்களில் இரண்டு பாட்டில்களை SHO seal செய்து மீதி பாட்டில்களை பை அடக்கம் seal செய்து அத்தாட்சியில் கைப்பற்றி நானும், SSI பால் ராஜ் என்பரும் , அத்தாட்சியில் கையொப்பம் செய்தோம். எதிரியின் முன்னால் இருந்தவர் ஓடி தலைமறைவாகி விட்டார். பின்னர் அத்தாட்சியில் கைப்பற்றிய பொருட்களையையும் எதிரியையும் சுமார் 1.00 மணி அளவில் காவல் நிலையம் கொண்டு வந்து எதிரியின் உறவினர்களுக்கு தகவல் சொல்லி பின்னர் நிலைய குற்ற எண்.24/2020 u/s. 4(1)(i) R/W 4(1) (A) TNP Act ன் படி உதவி ஆய்வாளர் நடவடிக்கை எடுத்தார். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது ஆகும். அது அ.சா.ஆ.2. எதிரியிடம் இருந்து கைப்பற்றிய 36 பாட்டில்கள்

மஞ்சள் நிற சாக்குபையுடன் கூடியது சா.பொ.1. தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள பணம் ரூ.6000/– சா.பொ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

காவல் நிலையத்தில் இருந்து படர் நிலம் வயக்கரை பகுதிக்கு எப்படி சென்றேன் என்ற விபரம் எனக்கு நினைவில் இல்லை. வயக்கரை தென்னந்தோப்பு பகுதியில் வீடுகள் உள்ளன என்றால், தென்னந்தோப்பிற்கு கொஞ்சம் தள்ளி வீடுகள் உள்ளன. மேற்படி கைப்பற்றுதல் நடவடிக்கை சுமார் 15.00 நிமிடங்களில் நடந்து முடிந்தது. அந்த சமயத்தில் பொது மக்கள் யாரும் அங்கு இல்லை. நானோ அல்லது என்னுடன் இருந்த மற்ற போலீசார், அத்தாட்சியில் கையொப்பம் செய்ய யாரையும் அழைக்கவில்லை. 36 பாட்டில்களில் இருந்து 2 பாட்டில்களை மட்டும் நாங்கள் மாதிரிக்காக எடுத்தோம். இது போன்ற வழக்குகளில், அத்தாட்சியில் தனிநபர் சாட்சிகள் கையொப்பம் பெற வேண்டும் என்ற விபரம் எனக்குத் தெரியும். எங்களது மணவாளக்குறிச்சி காவல் நிலைய உட்கோட்டத்தில் மது விலக்கு சிறப்பு பிரிவு காவல் நிலையம் செயல்பட்டு வருகிறது என்றால், சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அத்தாட்சி காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால், சரியல்ல. இந்த வழக்கு புள்ளி விபரங்களுக்காக தயார் செய்யப்பட்டது என்றாலும், நான் எங்கள் துறையினருக்கு ஆதரவாக தவறுதலாக எதிரிக்கு எதிரா சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**